# கழகத் தலைவரின் பிறந்தநாளை மக்களுக்குப் பயனுள்ள வகையில் கொண்டாடுவோம்!

## இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உரை...

11-ஆம் பக்கத் தொடர்ச்சி

காண்கிறது. சட்டமன்றத்தில் நாம் நிறைவேற்றி அனுப்புகின்ற சட்டங்களுக்கும் ஆளுநர் ஒப்புதல் தருவது இல்லை. மாறாக தமிழ்நாடு என்று சொல்லாதீர்கள், தமிழ்த்தாய் வாழ்த்து பாடாதீர்கள் என்று சட்டப்பேரவையை 'வாக்கிங்' செல்வதற்காக பயன்படுத்துகின்ற ஒரே ஆளுநர் நம் ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள்தான். அவரின் நடவடிக்கைகளை கண்டித்து நாம் வழக்கு தொடர்ந்து உள்ளோம்.

உச்சநீதிமன்றமே இப்போது அவருக்குக் கொட்டு வைத்துக்கொண்டு இருக்கிறது. இங்கு ஆளுநரை கண்டித்து தீர்மானம் போட்டு இருக்கிறோம். நியாயமாக அவருக்கு நன்றி சொல்லித்தான் தீர்மானம் போட்டிருக்க வேண்டும். ஏன் என்றால் தலைவர் அவர்களே, இங்கு சட்டமன்ற தேர்தல் முடிகிற வரை இங்கு இருக்கின்ற பா.ஜ.க தலைவரையும், ஆளுநரையும் மாற்றாதீர்கள் என்று சொல்லி இருக்கிறார். தி.மு.க. செய்ய வேண்டிய பிரச்சாரத்தை இவர்கள் இருவரும் செய்துகொண்டு இருக்கிறார்கள் என்று நம் தலைவர் அவர்கள் தொடர்ந்து ஒன்றிய அரசிடம் கோரிக்கை வைத்துள்ளார்.

**கல்வியை, காவியமாக்க முயற்சி!**

அதுமட்டுமல்ல, இன்றைக்கு யு.ஜி.சி. வரைவு அறிக்கையை ஒன்றிய அரசு அனுப்பியுள்ளது. அதன் மூலம், நாட்டில் இருக்கின்ற பல் கலைக்கழகங்களை எல்லாம் காவிமயமாக்க முயற்சிகளைச் செய்துகொண்டு இருக்கிறது. குறிப்பாக, துணை வேந்தர்கள் நியமனத்தை ஆளுநர் மூலமாக மேற்கொள்ள வேண்டும் என்று யு.ஜி.சி. வரைவு அறிக்கை சொல்கிறது. இதை நாம் அனுமதித்தால், வகுப்பறைகளில் கணக்கு, அறிவியலுக்குப் பதிலாக, கோமியத்தைக் குடித்துவிட்டு வகுப்பறைக்கு வா என்று சொன்னாலும் சொல்வார்கள். இதை நாம் எந்தக் காலத்திலும் அனுமதிக்கக்கூடாது.

ஆகவே, கல்வி நிலையங்களைக் காவிக்கூடங்களாக மாற்ற நினைக்கிற இந்த சங்கிகளின் சூழ்ச்சியையும் நாம் வீழ்த்த வேண்டும். அதுமட்டுமல்ல, திராவிட மாடல் அரசின் சாதனைகள் பொறுக்காமல், இன்றைக்கு சங்கிகளும், அடிமைகளும், தமிழ்நாட்டில் ஏதாவது ஒரு இடத்தில் மதக் கலவரம் வந்து விடாதா, சாதிச்சண்டை நடக்காதா என்று, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பொய்யைக் கிளப்பி விடுறார்கள். அவர்கள் எல்லாம் எந்தெந்த கலரில் வந்தாலும், அவர்களின் உண்மை நிறம் காவிதான் என்பது தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரியும்.

இன்றைக்கு இவ்வளவு பிரச்சினை நடக்கிறது. ஆனால், எதிர்க்கட்சி அ.தி.மு.க. எங்கே, என்ன நிலைமையில் இருக்கிறது என்று யாருக்கும் தெரியவில்லை. அண்ணா பெயரையும், திராவிடத்தையும் கட்சிப் பேரில் வைத்து இருக்கின்ற அ.தி.மு.க.-வும், அந்த அ.தி.மு.க.-வுக்கு பொதுச்செயலாளர் என்று சொல்லிக்கொண்டு இருக்கின்ற எடப்பாடி பழனிச்சாமியும் அமைதியாக இருக்கிறார்.

**இந்தித் திணிப்புக்கு எதிராக கிளர்ந்தெழுவோம்!**

மும்மொழிக் கொள்கையைத் திணிக்கின்ற பா.ஜ.க.-வை ஏன் அ.தி.மு.க கண்டிக்கவில்லை என்று கேட்டால்,

"சென்ற வருடமே கண்டித்துவிட்டோம்" என்று சொல்கிறார்கள். கண்டிப்பதைக்கூட அட்வான்ஸ் புக்கிங்கில் கண்டனங்களைத் தெரிவித்துக்கொண்டு இருக்கிறது. அந்த அளவுக்கு பா.ஜ.க. மேல் பயம். ஆனால், நம் திராவிட முன்னேற்றக் கழகம் அப்படியில்லை. தமிழ்நாட்டு மக்களுக்கு ஏதாவது ஒரு தீங்கு வந்தது என்றால், முதலில் களத்துக்கு வந்து போராடுறது நம் இயக்கம்தான் என்பதை இளைஞர் அணி தம்பிமார்கள் நீங்கள் உணர வேண்டும்.

2 நாட்களுக்கு முன்பு நீங்கள் மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்டால்தான் நிதி தர முடியும் என்று ஒன்றிய அமைச்சர் சொல்கிறார். மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொள்ளவில்லை என்று,

தமிழ்நாட்டின் கல்விக்காக தர வேண்டிய நிதியை குஜராத்துக்கும், உத்தரப்பிரதேசத்துக்கும்

ஒன்றிய அரசு பிரித்துக் கொடுத்து இருக்கிறது. அந்த நிதியைக் கேட்டால், தமிழ்நாடு மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஒன்றிய அமைச்சர் திரு.தர்மேந்திர பிரதான் மிரட்டுகிறார். தமிழ்நாட்டு மக்களை ஒரு போதும் மிரட்டி பணிய வைக்க முடியாது. எத்தனையோ மிரட்டல்களை, அடக்குமுறைகளை சந்தித்தவர்கள் நாம்.

1938-களிலும், 1965-களிலும், இந்தித்திணிப்புக்கு எதிராக மாணவர்கள், இளைஞர்கள்தான் களத்துக்கு வந்தார்கள். ஆகவே, இன்றைக்கு இளைஞர் அணியில் உள்ள நாம் ஒவ்வொருவரும், இந்தித்திணிப்புக்கு எதிராகப் போராடுவதற்கு தயாராக இருக்க வேண்டும். அதற்கு முதல் கட்டமாக, இளைஞர் அணி சார்பில் தமிழ்நாடு முழுக்க சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டன பொதுக்கூட்டங்களை நடத்த வேண்டும்.

இந்த கண்டன பொதுக்கூட்டங்கள் மூலம் இந்தித்திணிப்புக்கு எதிராக நாம் எழுப்புகிற முழக்கம் இந்தியா முழுக்க எதிரொலிக்க வேண்டும்.

**200 தொகுதிகள் இலக்கு!**

2026-ஆம் ஆண்டு தேர்தலுக்கு சரியாக இன்னும் ஒரு வருடம்தான் இருக்கிறது. அதற்கு இப்போதிலிருந்து ஒற்றுமையோடு உழைக்க ஆரம்பியுங்கள். 1960-களிலும், 70-களிலும் இன்றைக்கு இருப்பது போல சமூக வலைத்தளங்கள், தொலைக்காட்சி ஊடகங்கள் இல்லை. அந்த நிலைமையை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். உண்மையான மொழிப் பற்றோடு களத்திற்கு வந்தார்கள். அந்த உணர்வோடு நாமும் பணியாற்ற வேண்டும். நம்மைப்பற்றி சிறு அவதூறாவது கிடைத்துவிடாதா என்று எதிர்க்கட்சியினர் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் மிகுந்த கவனத்தோடு, எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். நம்மீது சிறிய குற்றச்சாட்டுக் கூட வந்துவிடக்கூடாது.

களத்தில் ஒன்றிணைந்து பணியாற்றும் போது சிறு,சிறு சங்கடங்கள், பிரச்சினைகள் வரத்தான் செய்யும். அவை அனைத்துமே பேசி தீர்க்கக்கூடியவைதான். அதை அடுத்துக் கட்டத்திற்கு எடுத்துச்செல்லக் கூடாது. பிரச்சினைகளை பின்னுக்குத்தள்ளி, நம் லட்சியங்களை நோக்கித்தான் நடைபோட வேண்டும்.

இன்றைக்கு திராவிட இயக்கத்தை ஒழிப்போம், குழித்தோண்டி புதைப்போம் என்று புதிது புதிதாகக் கிளம்பி வருகிறார்கள். புது அணிகள் கூட வரும். அதைப்பற்றி எல்லாம் நாம் கவலைப்பட வேண்டாம். அவர்களுக்கு எல்லாம் 1940-களிலேயே பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு பதிலைச் சொல்லி இருக்கிறார். அந்த பதிலை இங்கு நான் நினைவுபடுத்தி பதிவுசெய்ய விரும்புகிறேன்.

"நாங்கள் 4 அடி உயரம் இருப்பதாக நினைத்துக்கொண்டு எங்களைப் புதைத்துவிடலாம் என்று நீங்கள் 4 அடிக்கு குழி தோண்டுவீர்கள். நீங்கள் அந்த 4 அடி குழியை தோண்டுவதற்குள் நாங்கள் 2 அடி உயர்ந்து 6 அடியாக வளர்ந்திருப்போம். அதன்பிறகு எங்களை புதைப்பதற்கு, 6 அடிக்கு ஒரு குழியைத் தோண்டுவீர்கள். அதற்குள் நாங்கள் மேலும் 2 அடி உயர்ந்து 8 அடியாக வளர்ந்து நிற்போம். இப்படியே நீங்கள் காலம் முழுவதும் எங்களுக்காக குழிவெட்டிக் கொண்டே இருக்க வேண்டியதுதான். ஆனால், நாங்கள் தொடர்ந்து வளர்ந்து கொண்டே இருப்போம். எங்கள் இயக்கத்தைப் புதைக்கின்ற அளவுக்கு உங்களால் என்றைக்கும் குழிவெட்ட முடியாது" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்.

எனவே, பாசிச கூட்டத்திற்கும், அவர்களின் வாடகை வாய்களுக்கும் அண்ணா சொன்ன அதே பதிலை, நாம் களத்தில் சொல்வோம் என்பதைக் கூறிக் கொள்கிறேன். எங்களை வீழ்த்த வேண்டுமென்று, நீங்கள் எவ்வளவு முயற்சி செய்தாலும், எவ்வளவு பெரிய குழி வெட்டினாலும், தி.மு.கழகத்தை உங்களால் தொட்டுக்கூட பார்க்க முடியாது. எங்கள் தலைவர் தலைமையில் நாங்கள் வெற்றிநடைப் போட்டுக்கொண்டேதான் இருப்போம்.

2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில், குறைந்தது 200 தொகுதிகளில் வெற்றிபெற வேண்டுமென்று நம் முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள் நமக்கு இலக்கு நிர்ணயித்துள்ளார்கள் என்றால், அதற்கு தலைவர் அவர்கள் இளைஞர் அணியின் மீது வைத்திருக்கின்ற அந்த நம்பிக்கையும் மிக முக்கியமான காரணம்.

தலைவர் நமக்கு சொல்லியிருக்கிற இலக்கு 200. நாம் 200 அல்ல, 200-க்கும் அதிகமான தொகுதிகளில் நம் அணி வெல்ல வேண்டும். அதற்கு இளைஞர் அணியின் பங்களிப்பு மிக மிக முக்கியமானதாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கான உறுதிமொழியை ஏற்றுக்கொண்டு, அடுத்து வரும் ஒவ்வொரு நாளும் களப்பணியில் உழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த சிறப்பான வாய்ப்பை கொடுத்த அத்தனை பேருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

---

### இந்திய அளவில்

# சுற்றுலாத் துறையில் சிறந்து விளங்கும் முதன்மை மாநிலம் தமிழ்நாடு!

## சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பெருமிதம்!



சேலம், பிப். 22-

கூட்டரங்கில், நேற்று முன்தினம் (20.02.2025) சென்னை சுற்றுலா வளாக சுற்றுலாத்துறை யின் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலயங்கள் துறை அரசு கூடுதல் செயலாளர் டாக்டர்.கா. மணிவாசன் தலைமையில், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ் முன்னிலை யில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலிருந்தும் வருகை தந்த மாவட்ட சுற்றுலா அலுவலர்களிடம் தற்போது நடைபெற்று வரும் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

சுற்றுலாத்துறை பொழுதுபோக்கு சுற்றுலா, பாரம்பரிய சுற்றுலா, ஆன்மீக சுற்றுலா, பண்பாட்டு சுற்றுலா, மருத்துவச் சுற்றுலா என பல்வேறு வகையான சுற்றுலாகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த அனைத்து விதமான சுற்றுலாகளிலும் தமிழ்நாட்டில் சிறப்பான வாய்ப்புகள் உள்ளது.

தமிழ்நாட்டின் மருத்துவ கட்டமைப்பு குறைந்த செலவில் அதி நவீன, தரமான, சிறப்பான மருத்துவத்தை அளித்து வருவதால் மருத்துவச் சுற்றுலாவில் இந்தியாவில் முதலாவது மாநிலமாக திகழ்கின்றது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சுற்றுலாத் தலங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் மற்றும் புதிய சுற்றுலா தலங்களை கண்டறிந்து அவ்விடங்களில் உலக தரத்திலான அடிப்படை உள் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த ஆலோசிக்கப்பட்டது.

தற்போது சுற்றுலா பயணிகள் சுற்றுலா செல்லும் இடங்களில் நீங்காத அனுபவங்களை அளிக்கும் மலையேறுதல், மலைப்பகுதிகளில் தங்குதல், நீர்சறுக்கு, அலைச்சறுக்கு மேற்கொள்ளுதல் உள்ளிட்ட புதிய அனுபங்களை மேற்கொள்ள விரும்புகின்றார்கள். இவை தற்போது வளர்ச்சியடைந்து வருகின்றன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் உள்ள தங்கும் விடுதிகள் மற்றும் உணவகங்களில் உணவின் தரத்தை மேலும் மேம்படுத்தும் வகையில் சமையல் கலையில் நிபுணரான டாக்டர் பட்டம் பெற்ற தாமோதரன் (Dr. CHEF DHAMU) அவர்களின் அறிவுரைகளின் படி தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்களில் உள்ள அனைத்து சமையல் கலைஞர்களுக்கு காணொளி காட்சி வாயிலாக சமையல் கலையில் சிறப்பம்சங்களை எடுத்துறைத்தும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சிறப்பான வகையில் உணவு வழங்குதல், பரிமாறுதல் மற்றும் சுகாதார மேம்படுத்தல், போன்ற அறிவுரைகளை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொதுமேலாளர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்திருமதி.ச.கவிதா, சுற்றுலா ஆணையரக உயர் அதிகாரிகள் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக உயர் அதிகாரிகள் அனைத்து மாவட்ட சுற்றுலா அலுவலர்கள் மற்றும் சுற்றுலாத்துறை பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

### அண்ணா அறிவாலய ஊழியர்

# கி.பிரபாகரனின் மாமனார் அ.பொ.சந்திரன் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி! இன்று இறுதிச் சடங்குகள்!

சென்னை, பிப். 22-

அண்ணா அறிவாலய ஊழியர் கி.பிரபாகரன் அவர்களின் மாமனார் அ.பொ.சந்திரன் (வயது 75) சில நாட்களாய் உடல் நலக்குறைவு ஏற்பட்டு மருத்துவ சிகிச்சை மேற்கொண்டிருந்த நிலையில், சிகிச்சை பலனிக்காமல் நேற்று (21.02.2025) காலை 11.00 மணியளவில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அவருக்கு இரண்டு மகள்கள் உள்ளனர்.

அன்னாரது உடல், சென்னை18, தேனாம் பேட்டை, திருவள்ளுவர் சாலை, பாரதியார் தெருவில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. அவரது இறுதி ஊர்வலம் இன்று (22.02.2025) மதியம் 2 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டு மயிலாப்பூர் டி.ஜி.பி. ஆபிஸ் பின்புறத்தில் உள்ள இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.

---

# தி.மு.க. மருத்துவ அணி மாநில நிர்வாகிகள் அவசர ஆலோசனைக் கூட்டம்

தி.மு.க. மருத்துவ அணி

**மருத்துவ அணிச் செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. அறிவிப்பு**

கழக மருத்துவ அணியின் மாநில நிர்வாகிகள் அவசர ஆலோசனைக் கூட்டம் **22.02.2025** சனிக்கிழமை காலை **11.00** மணி அளவில், **ஆனந்த் கிராண்ட் பேலஸில்** (தளி சாலை, ஓசூர்) மருத்துவ அணி மாநிலத் தலைவர் மருத்துவர் கனிமொழி என்.வி.என். சோமு எம்.பி. அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக மருத்துவ அணியின் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

பொருள் : **1. கழகத் தலைவர், 'திராவிட மாடல்' நாயகர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழா**

**2. அணியின் வளர்ச்சிப் பணிகள்**

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள் : **20.02.2025**

**மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ.**
செயலாளர்
தி.மு.க. மருத்துவ அணி

---

### நாளை நடைபெறுகிறது!

# தூத்துக்குடி தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!

தூத்துக்குடி, பிப். 22-

தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தூத்துக்குடி தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் நாளை(23.02.2025 ஞாயிற்றுக் கிழமை) மாலை 4 மணிக்கு, மாவட்டக் கழக அலுவலகத்தில் அவைத் தலைவர் எஸ்.அருணாச்சலம் தலைமையில் நடைபெறவுள்ளது.



தமிழ்நாடு முதலமைச்சர் - திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் தளபதியார் அவர்கள் பிறந்தநாள் விழா மற்றும் கழக வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆலோசிக்க நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் கழக மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் மட்டும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார்.



வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி கிழக்கு ஒன்றியம் சத்தியமங்கலம் ஊராட்சி இராமாபுரம் கிராமத்தில் முழு நேர நியாய விலைக் கடையை மாவட்டக் கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, கிழக்கு ஒன்றிய செயலாளர் கோ.குமரபாண்டியன், மத்திய ஒன்றியச் செயலாளர் பி.வெங்கடேசன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

### மோடியால்

# தேசப் பாதுகாப்புக்கு ஆபத்து!

## கார்கே தாக்கு!

புதுடெல்லி,பிப்.22–

அருணாச்சல் பிரதேச மாநில எல்லையில் ஆயிரத்து 80 கிலோ மீட்டர் தொலைவுக்கு ஆக்கிரமித்துள்ள சீனா, 90 கிராமங்களை அமைத்து வருவதாக ஊடகங்களில் செய்தி வெளியாகி உள்ளது. இதனை குறிப்பிட்டு, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில்,

நாட்டின் தேசப் பாதுகாப்பு, இறையாண்மை, ஒருமைப்பாடு ஆகியவற்றை மோடி அரசு ஆபத்தில் தள்ளியிருப்பதாக குற்றஞ்சாட்டியுள்ளார். நரேந்திர மோடி தலைமையிலான பாஜக அரசு விளம்பரத்திற்கு தான் முன்னுரிமை அளிப்பதாகவும், நாட்டின் தேசப் பாதுகாப்புக்கு அல்ல என்றும் அவர் விமர்சித்துள்ளார். இந்திய நிலங்களை ஆக்கிரமிக்கும் சீனாவுக்கு சிவந்த கண்களை காட்டுவதற்குப் பதிலாக செவ்வணக்கம் செலுத்துவதை மோடி கொள்கையாக கடைபிடிப்பதாகவும் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே சாடியுள்ளார். பிரம்மபுத்திரா நதியில் 'உலகின் மிகப்பெரிய அணை' கட்டப்போவதாக கடந்த ஆண்டு இறுதியில், சீனா அறிவித்த விவகாரத்திலும் மோடி அரசு மவுனம் காத்தது என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

---



கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், சங்கராபுரம் சட்டமன்ற தொகுதி, சின்னசேலம் வடக்கு ஒன்றிய கழகம் சார்பில் பாக முகவர்கள் ஆலோசனை கூட்டம் கடத்தூர், ஏர்வாய் பட்டினம், தொட்டியம், தகரை, திம்மாபுரம், ஆகிய ஊராட்சிகலில் நடைபெற்றது, இதில் சின்ன சேலம் வடக்கு ஒன்றிய செயலாளர், ஒன்றிய குழு துணைத் தலைவர் அன்புமணி மாறன் தலைமை தாங்கினார், வடக்கு மாவட்ட செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ மற்றும் தொகுதி பொறுப்பாளர் வ.அன்பழகன் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கி உரையாற்றினார்கள், இதில் சின்ன சேலம் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.